**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 02.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 24/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-3 |
| **சாட்சியின் பெயர்** | : | தனபால் |
| **தந்தை பெயர்** | : | ராசைய்யா |
| **கிராமம்** | : | மலையூர் |
| **தாலுக்கா** | : | கூத்தாநல்லூர் |
| **தொழில்** | : | விவசாயம் |
| **வயது** | : | 73 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 ,2 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் உடையார் வகுப்பை சார்ந்தவன். அ.சா-1 சூரியாவை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் உடையார் சாதியை சேர்ந்தவர்கள். கடந்த

16.05.2020 ஆம் தேதி மதியம் சுமார் 2.30 மணி அளவில் சாப்பிட்டு கொண்டிருந்தபோது எனது வீட்டிற்கு எதிரே ஒரே சத்தம் கேட்டது. அப்போது அ.சா-1 சூரியா-வும் ஆஜர் எதிரிகளும் தள்ளிக்கொண்டு வாய் வார்த்தையால் பேசிக் கொண்டிருந்தார்கள். மேலும் பிரச்சனை வந்துவிட கூடாது என்று அ.சா-1 சூரியா-வை அழைத்து வந்து வீட்டிற்கு அனுப்பி வைத்தேன்.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

<u>அரசு தரப்பு தொடர் விசாரணை</u>

கடந்த 16.05.2020 ஆம் தேதி சுமார் 4.00 மணி அளவில் ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா-1-க்கும் எதிரிகளின் வீட்டின் முன்பாக சண்டை நடந்ததாகவும், அப்போது அ.சா-1 சூரியா தந்தை ரூ.3,00,000/- பணம் எதிரிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னதாகவும், அதற்கு அ.சா-1 சூரியா எனது அப்பா இறந்து 3 மாதங்கள் ஆகிவிட்டது. எனது தந்தை எந்த கடனும் இல்லை என்று கூறிவிட்டு இறந்து விட்டார் என்றும், தற்போது கடன் இருப்பதாக கூறுகிறீர்களே என்று கேட்டதற்கு 1ம் எதிரி பற பயலே உன் அப்பன் கொடுக்க வேண்டிய பணத்தை நீதான் கொடுக்க வேண்டும் என்று சாதியை சொல்லி 1ம் எதிரி திட்டியதாகவும், 2ம் எதிரி அ.சா-1ஐ கன்னத்தில் அறைந்தும், மூக்கில் குத்தி இரத்தம் வந்தாகவும், அவர்களை நீங்கள் சமாதானப் படுத்தியதாகவும், அதன் பின்னர் அவர்கள் மருத்துவமனைக்கு சென்றதாகவும், கடந்த 19.05.2020 ஆம் தேதி திருவாரூர் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணையில் கூறிவிட்டு தங்களும் எதிரிகளும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் விசாரணையில் கூறியதை மறைத்து எதிரிகளை காப்பாற்றும் நோக்கோடு

உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>** இல்லை

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.02 16:10:04 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.